A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 32 / 2024**

திரு ச. இளங்கோவன்,
த/பெ. சந்திரமோகன்,
எண்.9A, வடக்கு வடம்போத்தித் தெரு,
திருவாரூர்.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு கணேசன், வழக்கறிஞர்)

எதிர்

இளமின்பொறியாளர்/ இ&ப/வடக்கு/திருவாரூர்,
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
72, துர்காலயா ரோடு, திருவாரூர் – 610 002.

. . . எதிர்மனுதாரர்
(திரு D. முருகானந்தம், இளமின்பொறியாளர்/ இ&ப/வடக்கு/திருவாரூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 06-05-2024**

**கேட்புரை நாள்: 20-06-2024**

**ஆணை நாள்: 05-07-2024**

06.05.2024 அன்று பெறப்பட்ட திரு ச. இளங்கோவன், த/பெ. சந்திரமோகன், எண்.9A, வடக்கு வடம்போத்தித் தெரு, திருவாரூர் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 32/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.06.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

திருமதி புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்த மின் இணைப்பு எண். 573–055–416 –ஐ ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 வாரிசின் அடிப்படையில் தன்னுடைய அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வரும் மின் இணைப்பு எண். 573–055–416 –ஐ திருமதி புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும், மேலும் சிறப்பு பெயர் மாற்றம் முகாம் மூலமாக திருமதி R. புஷ்பா அவர்கள் விண்ணப்பத்துடன் கூடிய வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அளித்ததன் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டும் மற்றும் வருவாய் ஆவணத்தினை சரிபார்த்தும் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் திருவாரூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.12.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருவாரூர் மின் பகிர்மான வட்டம், 18.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திருவாரூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*இருதரப்பு வாதங்களை கேட்டறிந்த இம்மன்றம் திருமதி.புஷ்பா அவர்கள் மின் இணைப்பு 416 உள்ள இடத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் தொடர்புடைய வருவாய் துறையினரிடமிருந்து பெற்று சமர்பித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர் திரு.ச.இளங்கோவன் அவர்கள் பெயரில் மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்திட, மேற்படிமின் இணைப்பு உள்ள இடத்திற்குரிய வருவாய் ஆவணங்களை பெற்று தர உரிமம்தாரர் கேட்டுள்ளார். அவ்வாறு மின் இணைப்பு எண்.416 உள்ள இடத்திற்கு திரு.இளங்கேவன் அவர்களும் பெற்று சமர்பிக்கும் பட்சத்தில் மேற்கண்ட இடம் யாருக்கு சொந்தம் என சர்ச்சையினை தொடர்புடைய வருவாய் அலுவலரிடமிருந்து உரிய உறுதிப்படுத்தும் சான்றினை இள மின்பொறியாளர்/வடக்கு/திருவாருர் பெற்றப்பின் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கை எடுத்திட இம்மன்றம் உத்தரவிடுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.06.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு கணேசன், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு D. முருகானந்தம், இளமின்பொறியாளர்/ இ&ப/ வடக்கு/ திருவாரூர், திருவாரூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்**:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் தனது குடும்பத்துடன் நிரந்தரமாக வசித்து வருவதாகவும், திருவாரூர் டவுன், தெற்கு சேத்தி வட்டம், வடக்கு வடம்போக்கி தெருவில், வார்டு எண். 2, பிளாக் எண். 32, நகர அளவை எண். 1562–ல் 3230 சதுரடி ஜேக்கப் என்பவருக்கு சொந்தமானது என்றும், மேற்படி 3230 சதுரடியில் மேல்புறம் 2528 சதுரடியும், அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.415 உடன், புஷ்பா, க/பெ. ராமலிங்கம், வடக்கு வடம்போக்கித் தெரு என்பவர் அனுபவ கிரயம் பெற்றுள்ளார் என்றும் கிழக்குபுறம் உள்ள 702 சதுரடியும் அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.416–ம் இணைந்ததை தனது தாயார் மஹாராணி அனுபவ கிரயம் பெற்று, அவர் இறந்த பிறகு வாரிசின் அடிப்படையில் மகனான தான் ஆண்டு, அனுபவம் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 இந்த நிலையில் தான் 05.10.2023 அன்று தனது வீட்டிற்குண்டான மின் இணைப்பு எண். 416–க்கு தொகை செலுத்திய போது, புஷ்பா பெயரில் ரசீது வழங்கப்பட்டுள்ளதாகவும், தான் குடியிருக்கும் வீட்டிற்கும், திருமதி.புஷ்பா என்பவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், திருமதி.புஷ்பா என்பவரின் வீட்டின் மின் இணைப்பு எண்.415 ஆகும் என்றும், தனது வீட்டின் மின் இணைப்பு எண். 416 ஆகும் என்றும், தனது வீட்டின் மின் இணைப்பு எண். 416–ஐ, புஷ்பா பெயரில் இருந்து தனது பெயருக்கு மாற்றம் செய்து தகுந்த உத்தரவு வழங்கவேண்டி திருவாரூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மனு தாக்கல் செய்து, மனு எண். CGRF Petition Ack No. 10/2023 என கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 18.01.2024–ல் உத்தரவு ஏற்பட்டு தனக்கு 15.02.2024–ல் மேற்படி உத்தரவு கிடைக்கப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 திருவாரூர் டவுன் நகர அளவை எண். 1562–ல் மொத்தம் 3230 சதுரடி அ/மி தியாகராஜ சுவாமி அபிஷேக கட்டளைக்கு சொந்தமானதாகும் என்றும், அதில் 702 சதுரடியையும், அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீட்டையும், மின் இணைப்பு எண்.416–யும் தனது தாயார் மஹாராணி அனுபவ கிரயம் பெற்றுள்ளார் என்றும், அந்த சாசனம் புகார் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த சாசனத்தை திருவாரூர்

நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அடி மனை கோவில் இடம் என்பதால் பட்டா மாற்றம் செய்ய இயலாது என்றும், புஷ்பா என்பவர் கோவில் இடத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக வட்டாட்சியர் உத்தரவு ஏதும் இல்லாமல், தனது பெயரை சிட்டாவில் சட்டத்திற்கு புறம்பாக சேர்த்துள்ளதாகவும், கோவில் இடத்திற்கு பட்டா என்பது வர இயலாது என்பதை திருவாரூர் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 புஷ்பா என்பவர் தான் குடியிருக்கும் தனக்கு சொந்தமான வீட்டின் மின் இணைப்பு எண். 416–ஐ அவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்துள்ளதாகவும், மனுவின் பேரில் ஸ்தல ஆய்வு மேற்கொள்ளும் பொழுது மின் இணைப்பு எண்.416 எண் கொண்ட வீட்டில் தான் தனது மனைவி, குழந்தைகள் குடியிருந்து வசித்து வருவதாகவும், ஸ்தல ஆய்வு மேற்கொண்ட செயற்பொறியாளர் முருகானந்தம் என்பவருக்கு தான் குடியிருந்து வருகிறேன் என்ற விபரம் நன்றாக தெரியும் என்றும், தெரிந்தும் மின் இணைப்பு எண். 416–ஐ தனது பக்கத்து வீட்டில் வசித்து வரும் புஷ்பா பெயருக்கு சட்டத்திற்கு புறம்பாக மாற்றம் செய்துள்ளார் என்றும், ஸ்தல ஆய்வு மேற்கொண்டதை பொறுத்து திருவாரூர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் இடத்தின் உரிமையாளரான ஜேக்கப் என்பவரிடம் புஷ்பா 3230 சதுரடியில் 2528 சதுரடி அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீட்டையும் அனுபவ பாத்தி கிரயம் பெற்றுள்ளார் என்றும், மீதம் இருந்த 702 சதுரடியும், அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீட்டையும், மின் இணைப்பு எண்.416–யும் தனது தாயார் அனுபவ பாத்திய கிரயம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி ஆவணங்களை திருவாரூர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் திருவாரூர் குறைதீர் மன்றத்தில் மின் இணைப்பு எண். 416 தனது வீட்டிற்கு உள்ளது என்பது ஆவணங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்றும், அதை புஷ்பா பெயரில் இருந்து நீக்கம் செய்வது சம்பந்தமாக எந்தவித பரிசீலனையும்

செய்யலில்லை என்றும், மாறாக மின் இணைப்பு எண். 416–க்கு உரிய வருவாய் ஆவணங்களை பெற்று சமர்ப்பிக்குமாறு திருவாரூர் குறைதீர் மன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அடி மனை கோவில் இடம் என்பதால் பட்டா போன்ற வருவாய் ஆவணங்கள் கோவில் இடத்திற்கு பெற இயலாது என்றும், இதை திருவாரூர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும் எதன் அடிப்படையில் மின் இணைப்பு எண்.416–ஐ புஷ்பா பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி மனு சமர்பித்து அதற்கான ஆவணங்களை கோரியதற்கு தான் மூன்றாம் நபர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதிலிருந்தே செயற்பொறியாளர் முருகானந்தம் என்பவர் ஏதோ சட்டத்திற்கு புறம்பாக தகவல் அளித்துள்ளார் என்பது தெரியவருவதாகவும், மேலும் சொத்தின் உரிமையாளர் தான் என்பது செயற்பொறியாளர் முருகானந்தம் என்பவருக்கு நன்றாகவே தெரிந்தும், தன்னுடைய சுயநலத்திற்காக, தன்னுடைய பதவியை தவறான முறையில் பயன்படுத்தி வந்துள்ளார் என்பதை திருவாரூர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மேற்படி மின் இணைப்பு எண்.416 என்பது ஜேக்கப் என்பவருக்கு உரிமையாக இருந்து அனுபவ கிரய பத்திரம் மூலம் தனது தாயாருக்கு கிடைக்க பெற்று, வாரிசின் அடிப்படையில் தன்னுடைய அனுபவத்திலும், உரிமையிலும் இருந்து வருவதால் புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்த இணைப்பு எண்.416–ஐ ரத்து செய்து உத்தரவிட வேண்டுமாய் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

6.1 புகார் மனுதாரர் திரு. ச.இளங்கோவன் த/பெ. சந்திரமோகன் அவர்கள் புகார் மனுவில் திருவாரூர் டவுன் தெற்கு சேத்திவட்டம். வடக்கு வடம்போக்கி தெருவில் வார்டு எண் 2. பிளாக் எண் 32, நகர அளவை எண் 1562 –ல் 702 சதுர அடியில் உள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்: 573–055–416 ம் தனது தாயார் கிரயம் பெற்று அவர் மறைந்த பிறகு வாரிசின் அடிப்படையில் தான் அனுபவித்து வருவதாகவும்,

அது வரை ஜேக்கப் பெயரில் இருந்த மின் இணைப்பு தற்போது R.புஷ்பா க/பெ ராமலிங்கம் பெயரில் வருவதாகவும், அதனை தனது பெயரில் மாற்றம் செய்து தருமாறு அளித்த புகார் மனுவிற்கு, இணையதளம் வழியாக பெயர் மாற்றத்திற்கு உண்டான ஆவணங்கள் மற்றும் வரி ரசீதுடன் கூடிய விண்ணப்பம் மற்றும் விண்ணப்ப கட்டணம் செலுத்தும் பட்சத்தில் பெயர் மாற்றம் செய்ய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மின் இணைப்பு எண்:573-055-416, வீதப்பட்டி IA, திருமதி.R. புஷ்பா க/பெ, ராமலிங்கம் அவர்கள் உரிய வருவாய் ஆவணங்கள், நகராட்சி வரி ரசீது மற்றும் உறுதிமொழி பத்திரம் அளித்ததன் அடிப்படையில் உரிய விண்ணப்பக் கட்டணம் பெற்று பெயர் மாற்றம் கடந்த 16.08.2023 செய்யப்பட்டுள்ளதாகவும், இருப்பினும் மேற்கண்ட பட்டா எண்ணில் உள்ள மின் இணைப்பு எண் 416 உள்ள இடம் தங்களுக்கு (திரு இளங்கோவன்) சொந்தமாக இருப்பின் உரிய விண்ணப்பம் மற்றும் அண்மையில் பெறப்பட்ட வரி ரசீது மற்றும் வருவாய் ஆவணங்களுடன் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திருமதி. R. புஷ்பா க/பெ ராமலிங்கம், வடக்கு வடம்போக்கி தெரு, திருவாரூர் அவர்கள் அளித்த வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் திருவாரூர் டவுன் நகர அளவை எண் 1562 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்படி நகர அளவை எண்: 1562/2 ல் 2524 சதுர அடியும், 1562/1 ல் 710 சதுர அடியும் ஆக கூடுதல் 3234 சதுர அடிக்கு உண்டான வருவாய் ஆவணங்கள் திருமதி. R. புஷ்பா க/பெ ராமலிங்கம் பெயரில் அளித்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் 1562/1-ல் உள்ள 710 சதுர அடியில் இயங்கி வந்த மின் இணைப்பு எண்: 573-055-416 னை, ஜேக்கப் பெயரிலிருந்து R. புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் மஹாராணி அனுபவ கிரயம் பெற்றுள்ளதாக அளித்த தகவலின் படி மனுதாரர் அளித்த ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் சார்பதிவாளர் அவர்களால் பத்திர பதிவு செய்யப்படாத ஆவணம் என்பது தெரியவருகிறதாகவும், திருவாரூர் டவுன் நகர

அளவை எண்: 1562 –க்கு உண்டான வருவாய் ஆவணங்கள் தொடர்பான உட்பிரிவு பெயர் மாற்றத்தில் ஆட்சபேனை இருப்பின் சம்பந்தப்பட்ட வட்டாச்சியர் அவர்களிடம் முறையிட்டு சரிசெய்து கொள்ள வேண்டி அறிவுருத்தப்பட்டதாகவும், வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் இணையதளத்தின் வழியாக நகர நில அளவைப் பதிவேட்டினை ( TSLR ) 08.08.2023 அன்று பதிவிறக்கம் செய்யப்பட்ட வருவாய் ஆவணம் மற்றும் திருவாரூர் நகராட்சி அவர்களால் 31.03.2023 அன்று திருமதி புஷ்பா அவர்களின் பெயரில் வழங்கப்பட்ட வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 திருமதி. R. புஷ்பா க/பெ ராமலிங்கம், வடக்கு வடம்போக்கி தெரு, திருவாரூர் அவர்களின் மின் இணைப்பு எண்: 573– 055– 416 இயங்கி வரும் இடத்தின் சர்வே எண்: 1562/1 –ற்கு உண்டான வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும், மேலும் சிறப்பு பெயர் மாற்றம் முகாம் மூலமாக திருமதி R. புஷ்பா அவர்கள் விண்ணப்பத்துடன் கூடிய வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அளித்ததன் அடிப்படையில் கள ஆய்வு செய்ய, விண்ணப்பத்துடன் கூடிய தொலைபேசி எண்ணினை அழைத்த பொழுது திருமதி R. புஷ்பா அவர்களின் கணவர் திரு. ராமலிங்கம் அவர்கள் தொலைபேசியினை ஏற்று, விண்ணப்பத்தில் உள்ள முகவரியை தெரிவித்ததன் அடிப்படையில் அந்த இடத்திற்க்கு சென்று கள ஆய்வு செய்யப்பட்டும் மற்றும் வருவாய் ஆவணத்தினை சரிபார்த்தும் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 திருவாரூர் டவுன் நகர அளவை எண் 1562–னை உட்பிரிவு செய்யப்பட்டதில் 1562/2ல் 2524 சதுர அடியும் 1562/1 ல் 710 சதுர அடியும் ஆக கூடுதல் 3234 சதுர அடிக்கு உண்டான வருவாய் ஆவணம் திருமதி R. புஷ்பா க/பெ ராமலிங்கம் பெயரிலும் மற்றும் வரி ரசீது உடன் கூடிய விண்ணப்பம் அளித்ததன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் திருவாரூர் டவுன் நகர அளவை எண் 1562/2 ல் 2524 சதர அடியும் 1562/1–ல் 710 சதுர அடியும் ஆக கூடுதல் 3234 சதுர அடிக்கு உண்டான

நகர நில அளவை பதிவேடு (TSLR) Copy) இணைத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மின் இணைப்பு எண் 573–055–416 ல் இயங்கி வரும் இடம் நகர அளவை எண் 1562/1 என்பதும் அவ்விடத்தின் வருவாய் ஆவணம் திருமதி R. புஷ்பா க/பெ ராமலிங்கம் அவர்கள் பெயரில் வழங்கப்பட்டதன் அடிப்படையில் வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் கோவில் இடம் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான பிரச்சனைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட துறையை அணுகி முறையிட்டு சரி செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 திரு. ச. இளங்கோவன் த/பெ சந்திரமோகன், வடக்கு வடம்போக்கி தெரு திருவாரூர் அவர்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 ன் கீழ் கேட்கப்பட்ட தகவல்கள் அளிக்கப்பட்டதாகவும், அதில் ஆவணங்கள் நகல் வழங்க திருமதி. R. புஷ்பா க/பெ. ராமலிங்கம் அவர்கள் ஆட்சபேனை தெரிவித்ததன் அடிப்படையில் அவர்கள் அளித்த கடிதம் நகல் இணைத்து மூன்றாவது நபர் என்பதால் ஆவணங்கள் நகல் வழங்க இயலாது என தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 திருவாரூர் டவுன், தெற்கு சேத்தி வட்டம், வடக்கு வடம்போக்கி தெருவில், வார்டு எண். 2, பிளாக் எண். 32, நகர அளவை எண். 1562–ல் 3230 சதுரடி ஜேக்கப் என்பவருக்கு சொந்தமானது என்றும், மேற்படி 3230 சதுரடியில் மேல்புறம் 2528 சதுரடியும், அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.415 உடன், புஷ்பா, க/பெ. ராமலிங்கம், வடக்கு வடம்போக்கித் தெரு என்பவர் அனுபவ கிரயம் பெற்றுள்ளார் என்றும் கிழக்குபுறம் உள்ள 702 சதுரடியும் அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.416–ம் இணைந்ததை தனது தாயார் மஹாராணி அனுபவ கிரயம் பெற்று, அவர் இறந்த பிறகு வாரிசின் அடிப்படையில்

மகனான தான் ஆண்டு, அனுபவம் செய்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இந்த நிலையில் தான் 05.10.2023 அன்று தனது வீட்டிற்குண்டான மின் இணைப்பு எண். 416–க்கு தொகை செலுத்திய போது, புஷ்பா பெயரில் ரசீது வழங்கப்பட்டுள்ளதாகவும், தான் குடியிருக்கும் வீட்டிற்கும், திருமதி.புஷ்பா என்பவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், திருமதி.புஷ்பா என்பவரின் வீட்டின் மின் இணைப்பு எண்.415 ஆகும் என்றும், தனது வீட்டின் மின் இணைப்பு எண். 416 ஆகும் என்றும், தனது வீட்டின் மின் இணைப்பு எண். 416–ஐ, புஷ்பா பெயரில் இருந்து தனது பெயருக்கு மாற்றம் செய்து வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 அடி மனை கோவில் இடம் என்பதால் பட்டா மாற்றம் செய்ய இயலாது என்றும், புஷ்பா என்பவர் கோவில் இடத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக வட்டாட்சியர் உத்தரவு ஏதும் இல்லாமல், தனது பெயரை சிட்டாவில் சட்டத்திற்கு புறம்பாக சேர்த்துள்ளதாகவும், கோவில் இடத்திற்கு பட்டா என்பது வர இயலாது என்பதை திருவாரூர் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பரிசீலனை செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி மின் இணைப்பு எண்.416 என்பது ஜேக்கப் என்பவருக்கு உரிமையாக இருந்து அனுபவ கிரய பத்திரம் மூலம் தனது தாயாருக்கு கிடைக்க பெற்று, வாரிசின் அடிப்படையில் தன்னுடைய அனுபவத்திலும், உரிமையிலும் இருந்து வருவதால் புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்த இணைப்பு எண்.416–ஐ ரத்து செய்து உத்தரவிட வேண்டுமாய் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மின் இணைப்பு எண்:573–055–416, வீதப்பட்டி IA, திருமதி.R. புஷ்பா க/பெ, ராமலிங்கம் அவர்கள் உரிய வருவாய் ஆவணங்கள், நகராட்சி வரி ரசீது மற்றும் உறுதிமொழி பத்திரம் அளித்ததன் அடிப்படையில் உரிய விண்ணப்பக் கட்டணம் பெற்று பெயர் மாற்றம் கடந்த 16.08.2023 செய்யப்பட்டுள்ளதாகவும், இருப்பினும் மேற்கண்ட பட்டா எண்ணில் உள்ள மின் இணைப்பு எண் 416 உள்ள இடம் தங்களுக்கு (திரு இளங்கோவன்) சொந்தமாக

இருப்பின் உரிய விண்ணப்பம் மற்றும் அண்மையில் பெறப்பட்ட வரி ரசீது மற்றும் வருவாய் ஆவணங்களுடன் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 திருமதி. R. புஷ்பா க/பெ ராமலிங்கம், வடக்கு வடம்போக்கி தெரு, திருவாரூர் அவர்கள் அளித்த வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் திருவாரூர் டவுன் நகர அளவை எண் 1562 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்படி நகர அளவை எண்: 1562/2 ல் 2524 சதுர அடியும், 1562/1 ல் 710 சதுர அடியும் ஆக கூடுதல் 3234 சதுர அடிக்கு உண்டான வருவாய் ஆவணங்கள் திருமதி. R. புஷ்பா க/பெ ராமலிங்கம் பெயரில் அளித்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் 1562/1-ல் உள்ள 710 சதுர அடியில் இயங்கி வந்த மின் இணைப்பு எண்: 573-055-416, திரு.ஜேக்கப் பெயரிலிருந்து R. புஷ்பா பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேலும் மஹாராணி அனுபவ கிரயம் பெற்றுள்ளதாக அளித்த தகவலின் படி மனுதாரர் அளித்த ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் சார்பதிவாளர் அவர்களால் பத்திர பதிவு செய்யப்படாத ஆவணம் என்பது தெரியவருகிறதாகவும், திருவாரூர் டவுன் நகர அளவை எண்: 1562 -க்கு உண்டான வருவாய் ஆவணங்கள் தொடர்பான உட்பிரிவு பெயர் மாற்றத்தில் ஆட்சபேனை இருப்பின் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அவர்களிடம் முறையிட்டு சரிசெய்து கொள்ள வேண்டி அறிவுருத்தப்பட்டதாகவும், வருவாய் ஆவணம் மற்றும் வரி ரசீது அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேற்கூறிய வாதுரை, எதிர்வாதுரை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் திருவாரூர் டவுன், தெற்கு சேத்தி வட்டம், வடக்கு வடம்போக்கி தெருவில், வார்டு எண். 2, பிளாக் எண். 32, நகர அளவை எண். 1562-ல் 3230 சதுரடி ஜேக்கப் என்பவருக்கு சொந்தமானது என்றும், மேற்படி 3230 சதுரடியில் மேல்புறம் 2528 சதுரடியும், அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.415 உடன், புஷ்பா, க/பெ. ராமலிங்கம், வடக்கு வடம்போக்கித் தெரு என்பவர் அனுபவ கிரயம்

பெற்றுள்ளார் என்பதும், கிழக்குபுறம் உள்ள 702 சதுரடியும் அதில் அமைந்துள்ள ஓட்டுவில்லை வீடும், மின் இணைப்பு எண்.416–ம் இணைந்ததை மேல்முறையீட்டாளரின் தாயார் மஹாராணி அனுபவ கிரயம் பெற்று, அவர் இறந்த பிறகு வாரிசின் அடிப்படையில் மகனான மேல்முறையீட்டாளர் ஆண்டு, அனுபவம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.10 சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்ததில் மின் இணைப்பு எண் 416 திரு ஜேக்கப் என்பவர் பெயரில் இருப்பதும் திருமதி புஷ்பா அவர்கள் நிலம் உரிமை விவரம் குறித்த வட்டாட்சியர் அலுவலக சான்றிதழ் மற்றும் திருவாரூர் நகராட்சியால் வழங்கப்பட்ட சொத்து வரி ரசீதின் அடிப்படையில் திருவாரூர் டவுன் நகர அளவை எண் 1562 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்படி நகர அளவை எண்: 1562/2 ல் 2524 சதுர அடியும், 1562/1 ல் 710 சதுர அடியும் ஆக கூடுதல் 3234 சதுர அடிக்கு உண்டான வருவாய் ஆவணங்கள் திருமதி R. புஷ்பா பெயரில் அளித்துள்ளதும், அதன் அடிப்படையில் 1562/1–ல் உள்ள 710 சதுர அடியில் இயங்கி வந்த மின் இணைப்பு எண்: 573–055–416–ஐ திரு.ஜேக்கப் பெயரிலிருந்து திருமதி R. புஷ்பா பெயருக்கு எதிர்மனுதாரரால் பெயர் மாற்றம் நடைபெற்றுள்ளது.

7.11 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதித்தொகுப்பு விதி 5(7)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழெ கொடுக்கப்பட்டுள்ளது.

*"5: **பல்வகைக் கட்டணங்கள்**:*
*(1) xxxxx*
*(2) xxxxx*
*(3) xxxxx*
*(4) xxxxx*
*(5) xxxxx*
*(6) xxxxx*
*(7) **பெயர் மாற்றக் கட்டணம்**:*

*(i) நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் இந்த விதி தொகுப்பின் பிற்சேர்க்கையில் படிவம் (1) இல் பின் வருவனவற்றை உடனிணைத்து தரப்பட வேண்டும்.*

*(a) உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரிகட்டிய பற்றுச் சீட்டு போன்ற உரிமையை நிலை நாட்டும் சான்றுமெய்ப்பு (Proof).*

*(b) சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ், அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ.80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Non Judicial) முத்திரைத்தாளில் இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (3) இலான*

*காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனித (Notary Public) ரின் அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான சூளேற்பு உறுதிமொழிப்பத்திரம் (Affidavit).*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப் படிவமும்*

*(ii) பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பிற நிகழ்வுகளில், இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத் தரப்பட வேண்டும்.*

*(a) இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (4) இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணம்.*

*(b) காப்புவைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம். அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்புவைப்புத்தொகை கட்ட வேண்டும்.*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும்.*

***விளக்கம்**: துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும்".*

7.12 மேற்கண்ட விதியின்படி மின் நுகர்வோர் இறந்த காரணத்திற்காக அல்லாமல் பிற நிகழ்வுகளில் பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) ஆகியவற்றை இணைத்து படிவம் (4)–இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டுமென அறிய முடிகிறது. காப்பு வைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்பு வைப்புத் தொகை கட்ட வேண்டுமெனவும், ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறியமுடிகிறது. மேலும் துண்டிப்பில் இல்லாத மின் இணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.13 இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரும் மின் இணைப்பு எண்:573–055–416 ஆனது தற்சமயம் வரை திரு ஜேக்கப் என்பவர் பெயரில் இருப்பது தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் தற்சமயம் வசித்து வரும் 1562/1–இல் 710 அடியில் உள்ள அடிமனை திருவாரூர் ஸ்ரீ தியாகராஜா சுவாமி அபிஷேகக் கட்டளை கோவிலுக்கு சொந்தமானது என்று தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் வசித்து வரும் ஓட்டு வீட்டில் திரு ஜேக்கப் ஜான் ராஜிடமிருந்து

அவருடைய பாட்டனார் திரு ஜேக்கப் என்பவரிடம் உயில் பத்திரம் அடிப்படையில் பெறப்பட்டதை மேல்முறையீட்டாளர் தாயாருக்கு அனுபவ உரிமை மாற்றம் பெற்றது தெரியவருகிறது மற்றும் அதன் அருகில் உள்ள மனை எண் 1562/2–இல் உள்ள அடிமனையின் 2528 சதுரடி திருமதி புஷ்பா அவர்கள் திரு ஜேக்கப் என்பவரிடமிருந்து அனுபவ உரிமை பெற்றதும் ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் தற்சமயம் தனது தாயாருக்கு பின்பு வசித்து வரும் ஓட்டு வீட்டின் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யும் முன்பு வரை திரு ஜேக்கப் என்பவர் பெயரில் இருப்பது தெரியவருகிறது. பின்பு அந்நிகழ்வு எதிர்மனுதாரரால் திருமதி புஷ்பா பெயருக்கு மாற்றம் செய்தது தெரியவருகிறது.

7.14 இதன் மூலம் மின் இணைப்பின் பெயர் மாற்றம் மேல்முறையீட்டாளரின் தாயார் பெயரில் இருந்து திருமதி புஷ்பா பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக அறிய இயலவில்லை. மின் இணைப்பு எண்:573–055–416–ஐ பொறுத்தவரை பெயர் மாற்றத்திற்கு முன்புவரை திரு ஜேக்கப் அவர்கள்தான் உரிமையாளர் (Agreement Holder). மேலும் மேற்கண்ட மின்னிணைப்பு உள்ள இடத்தில் மேல்முறையீட்டாளரின் தாயாருக்கு அனுபவ உரிமை உள்ளது என கூறப்பட்டாலும் மின்னிணைப்பில் பெயர் மாற்றம் ஏதும் நடைபெறவில்லை. எனவே, மின்இணைப்பு பெயர் மாற்றத்திற்கு முன்புவரை மேல்முறையீட்டாளருடைய தாயார் பெயரில் மின்னிணைப்பு இல்லாத நிலையிலும், மின்னிணைப்பு உள்ள இடம் சம்பந்தமான உரிமையானது மின்குறை தீர்ப்பாளரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருப்பதாலும் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை என்னால் பரிசீலக்க இயலவில்லை. எனினும், மேல்முறையீட்டாளர் தனது கோரிக்கை சம்பந்தமாக உரிய ஆவணங்களுடன் உரிமதாரரிடம் முறையிட்டால் அதன் மீது தகுதி அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் தனது கோரிக்கை சம்பந்தமாக உரிய ஆவணங்களுடன் உரிமதாரரிடம் முறையிட்டால் அதன் மீது தகுதி அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 32/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு ச. இளங்கோவன், - By RPAD
த/பெ. சந்திரமோகன்,
எண்.9A, வடக்கு வடம்போத்தித் தெரு,
திருவாரூர்.

2. இளமின்பொறியாளர்/ இ&ப/வடக்கு/திருவாரூர்,
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
72, துர்காலயா ரோடு, திருவாரூர் – 610 002.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
73, துர்காலயா ரோடு, திருவாரூர் – 610 002.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.